சிவகங்கை மாவட்டத்தில் – ரூ. 200 கோடி செலவில்!

சட்டக் கல்லூரி வேளாண் கல்லூரி கட்டிடங்கள் : முதல்வர் திறந்து வைக்கிறார்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சிவகங்கை, ஜன. 25 -

வருகிற 30 31 ஆகிய தேதிகளில் இரண்டு தினங்கள் சிவகங்கை மாவட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கிறார். புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இது குறித்து காரைக்குடியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தமிழக முதல்வர் கழகத் தலைவர் முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 30 ,31 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார்.இதற்காக 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரைவிமான நிலையத்திற்கு வருகிறார். மதுரையிலிருந்து கார் மூலம் புறப்பட்டு மாலை முதல் நிகழ்ச்சியாக திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிராவயலில் அண்ணல் மகாத்மா காந்தியடிகளை கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவர் தோழர் ஜீவா சந்தித்த அரிய நிகழ்வான சிராவயலில் ரூபாய் 3.27 கோடி செலவில் நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அந்த மணிமண்டபத்தினை முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து தமிழக சட்டமன்றத்தில் முதல்வர் அவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார். அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில் குன்றக்குடியில்உள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபத்தில் குன்றக்குடி அடிகளார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். அதனை தொடர்ந்து 30 ஆம் தேதி மாலை காரைக்குடி வீறு கவியரசர் முடியரசனார் சிலை ரூபாய் 50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து டைட்டல் பார்க்கினை திறந்து வைக்கிறார். அன்று மாலை காரைக்குடியில் தங்குகிறார்.

31ஆம் தேதி சனிக்கிழமை காலை தமிழக முதல்வரால் சிவகங்கை மாவட்டத்திற்கு குறிப்பிட்ட முத்தான திட்டங்களான ரூபாய் 100 கோடியே 45 மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள சட்டக் கல்லூரி கட்டிடவளாகத்தினை திறந்து வைத்து புதிய திட்டத்திற்கான அறிவிப்பினை வெளியிடுகிறார். அதனை தொடர்ந்து கானாடுகாத்தான் செட்டிநாடு வேளாண்மை பண்ணையில் ரூபாய் 61 கோடியே 72 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை கல்லூரி கட்டிடத்தை திறந்து வைக்கிறார் .அங்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின் அங்கிருந்து கார் மூலம் மதுரை சென்று விமானம்மூலம் சென்னை செல்கிறார் . இந்த இரண்டு நாட்களிலும் தமிழக முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு மற்றும் பொது நிகழ்ச்சியில் பங்கேற்க சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார். இதற்கான ஏற்பாடு களை மாவட்ட நிர்வாகம் செய்துவருகிறது.

இரண்டு நாட்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ள முதல்வருக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் சிறப்பான முறையில் வரவேற்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் கூறினார்.

முன்னதாக அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா. பொற்கொடி ஆகியோர் சிறாவயலில் அண்ணல் காந்தியடிகளை தோழர் ஜீவா சந்தித்த இடத்தில் கட்டப்படும் மணிமண்டப பணிகளையும், ரூபாய் 50 லட்சத்தில் காரைக்குடியில் வீறுகவியரசர் முடியரசனாரின் சிலை அமைப்பு பணிகளையும் பார்வையிட்டார்கள்.

தொடர்ந்து காரைக்குடியில் ரூபாய் 100 கோடியே 45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சட்டக் கல்லூரி கட்டிடப் பணிகளையும் செட்டிநாட்டில் ரூபாய் 61 கோடியே 78 லட்சத்தில் கட்டப்பட்டு வரும் வேளாண்மைக் கல்லூரி கட்டிடங்கள்,டைட்டில் பார்க் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். முதல்வரின் இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் பணிகள் குறித்தும் அதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

அமைச்சருடன் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் காரைக்குடி துணை மேயர் நா. குணசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள் சென்றனர்.

சிவகங்கை மாவட்டத்திற்கு வருகைதரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில்!

சிவகங்கை, ஜன.25-

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும் பொன் தா.கிருட்டிணன் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமை யில் முன்னால் அமைச்சர் மூ. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ருசோ, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. வருகிற 30 , 31 ,ஆகிய தேதிகளில் நமது மாவட்டத்தில் காரைக்குடி மற்றும் பல்வேறு பகுதிகளில் முடிக்கப்பட்டுள்ள அரசு திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் முதல்வர்அவர்கள் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக வருகிற 30,31 ஆகிய தேதிகளில்வருகை தர உள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளாக பொற்கால ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் திராவிடர் மாடல் ஆட்சியின் நாயகர்.முதல்வர் தளபதி அவர்கள் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதிலுமிருந்து கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும். மார்ச் மாதம் 8ம்தேதி திருச்சியில் நடைபெறும் மாநாட்டில் அதிக அளவில் நமது மாவட்டத்திலிருந்து நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பிப்ரவரி மாதம் நடைபெறும் வெல்லும் தமிழ்ப்பெண்கள் பரப்புரையினை சிறப்பாக செய்திட வேண்டும். விருதுநகரில் நடைபெறும் மண்டல இளைஞரணி மாநாட்டில் சிவகங்கை மாவட்டம் முழுவதிலுமிருந்து இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்று மாநாட்டினை சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன் பேசினார். இந்த செயற்குழு கூட்டத்தில் முன்னாள் எம்.எல். ஏக்கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன். கென்னடி,. பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி , நகர்கழக செயலாளர்கள். பெரி.பாலா, க.பொன்னுச்சாமி ,சி.எம் துரை ஆனந்த், மாவட்டசெய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் மற்றும் ஒன்றிய, பேருர் கழக கழகச்செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் சார்புஅணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முடிவில் காரைக்குடி மாநகர துணைமேயர் நா. குணசேகரன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1.வருகிற 30, 31 ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் அரசு மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகைதரும் முதல்வருக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்புதருவதாக தீர்மானிக்கப்பட்டது முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் அதிக அளவில் கட்சியின் நிர்வாகிகள், பொதுமக்களை பங்கேற்க செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது

2. விருதுநகரில் நடைபெற உள்ள மண்டல இளைஞரண மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பஸ், வேன், கார்களில், சென்று சிறப்பான முறையில் இளைஞர்கள் பங்கேற்க தீர்மானிக்கப்பட்டது.

3.வருகிற பிப்ரவரி ஒன்றாம் தேதி வெல்லும் தமிழ்ப்பெண்கள் நிகழ்ச்சியினை மாவட்டத்தில் மாவட்டத்தில் ஒன்றிய நகர, பேரூர், பகுதிகளில் சிறப்பாக நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

வே.ஜெயபாலன் தலைமை! மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி. பங்கேற்பு!

தென்காசி தெற்கு மாவட்டத்தில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

மனோஜ் பாண்டியன் – சரவணன் – போடி கலைச் செல்வன் – சாகுல் ஹமீதுகான் சிறப்புரை!

தென்காசி,ஜன.25-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் இன்று (25.01.2026-ஞாயிற்றுக் கிழமை) மாலை 6 மணி அளவில் செங்கோட்டை தாலுகா அலுவலகம் அருகில் அறிஞர் அண்ணா திடலில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாநில நிர்வாகிகள் அப்துல்காதர்,செல்லப்பா, மாவட்ட அவை தலைவர் சுந்தரமகா லிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை, ஆறுமுகச்சாமி, ஷேக் தாவுது, முத்துப் பாண்டி, சேசுராஜன், மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, மாவட்ட பொருளாளர் ஷெரிப், பொதுக்குழு உறுப்பினர்கள் இராஜேஸ்வரன், ரஹீம், சாமிதுரை,தமிழ்ச் செல்வி, அருள் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

செங்கோட்டை நகர செயலாளர் ஆ.வெங்கடேசன் வரவேற்புரையாற்றுகிறார்.நகர இளைஞரணி அமைப்பாளர் காஜா முகைதீன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன்,கழக செய்தி தொடர்பாளர் சரவணன், தலைமைக் கழக பேச்சாளர்கள் போடி கலைச்செல்வன் சாகுல் ஹமீதுகான், தென்காசி நாடாளு மன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், கடையநல்லூர் தொகுதி பார்வையாளர் குணசேகரன், தலைமை பேச்சாளர் வேங்கை சந்திரசேகர் ஆகியோர் பங்கேற்று எழுச்சி உரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் ஒன்றிய, நகர, பேரூர்,கழக செயலாளர்கள்,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு கழக செயலாளர்கள்,நகர்மன்ற உறுப்பினர்கள், பாக முகவர்கள், வார்டு கழக பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட துணை செயலாளர் கென்னடி நன்றியுரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் செங்கோட்டை நகர தி.மு.க.வினர் செய்துள்ளனர்.

விருதுநகர் நகர தி.மு.க. சார்பாக பேரறிஞர் அண்ணா சிலை வளாகத்தில் திராவிடப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விருதுநகர் சேர்மன் எஸ்.ஆர்.எஸ். மாதவன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் சுப்பாராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சுதாகர், மதியழகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ராஜகுரு, நகர நிர்வாகிகள் காசிராஜன், ரமேஷ் குமார், நேஷனல் ராமர், திருமாறன், துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், மரியராசு, வழக்கறிஞர் அசோகன், இலக்கிய அணி மலைராஜன், மகளிர் அணி வகிதா ரஹ்மான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், செய்திருந்தார்.

நெல்லை மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

இரா.ஆவுடையப்பன் தலைமையில்!

நெல்லை., ஜன.25-

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் நெல்லை மேற்கு மாவட்ட கழக அலுவலகம். 23.01.2026 வெள்ளிக்கிழமை அன்று

டாக்டர்.கலைஞர் அரங்கத்தில் மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன்,

தொகுதி பார்வையாளர்கள் அம்பாசமுத்திரம் ஜோசப் ராஜ், ஆலங்குளம் கே.கணேஷ்குமார் ஆதித்தன்,மாநில தொண்டர் அணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாவட்ட துணை செயலாளர்கள் ப. தமயந்தி, கு.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் இராமச்சந்திரன்,மா.கணேசன்,கா.அபூபக்கர், எஸ்.கதிர்வேல் முருகன், இரா.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள், பொறுப்பாளர்கள் அம்பாசமுத்திரம் மேற்கு பா. ஜெகன், சேரன்மகாதேவி கிழக்கு முத்துபாண்டி (எ) பிரபு, சேரன்மகாதேவி மேற்கு முத்துகிருஷ்ணன்,ஆலங்குளம் கிழக்கு மு.செல்லத்துரை, ஆலங்குளம் தெற்கு,சிவக்குமார், கடையம் மேற்கு ஜெயக்குமார், கடையம் வடக்கு மகேஷ் மாயவன், கீழப்பாவூர் கிழக்கு சிவன் பாண்டியன்,கீழப்பாவூர் வடக்கு பொன்செல்வன்,பாப்பாக்குடி மாரிவண்ணமுத்து,நகர செயலாளர் விக்கிரமசிங்கபுரம் கணேசன்,

பேரூர் செயலாளர்கள் ஆலங்குளம் நெல்சன்,ஆழ்வார்குறிச்சி அழகேசன்,முக்கூடல் லஷ்சுமணன், கீழப்பாவூர் ஜெகதீசன், மணிமுத்தாறு முத்துகணேசன், கல்லிடைக்குறிச்சி இசக்கிபாண்டி, வீரவநல்லூர் சுப்பையா, சேரன்மகாதேவி மணிஷா செல்வராஜ்,மேலச்செவல் மணிகண்டன்,கோபாலசமுத்திரம் வானுவாமலை அணி அமைப்பாளர் கள் இளைஞர் அணி ஜெ.ஜான் ரபீந்தர்,மகளிர் அணி சங்கீதா சுதாகர்,மகளிர் தொண்டர் அணி திவ்யா மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி பிரேம்ஆனந்த் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாடு

துணை முதல்வர் பிறந்தநாள் விழா-1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வி.கே.முருகன் தலைமை!

மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. – டி.எம்.என்.தீபக் பங்கேற்பு!

நெல்லை.ஜன.25-

நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நாளை (26.01.2026 -திங்கட்கிழமை) மாலை 5 மணி அளவில் நெல்லை டவுன் குளப்பிறைத் தெருவில் மாவட்ட அவைத் தலைவர் வி.கே.முருகன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிபாண்டியன்,ஏ. எல். எஸ்.லெட்சுமணன்,மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் பகுதி பொறுப்பாளர்கள் நமச்சிவாயம் கோபி,பூ.சுப்பிரமணியன்,சங்கர், டாக்டர்.சங்கர் மாமன்ற உறுப்பினர் உலகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.கழக மாற்றுத் திறனாளிகள் அணி செயலாளர் டி. எம்.என்.தீபக் ஆகியோர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன் கான்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி, மாநில சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகம்மது,மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன்,பொதுக்குழு உறுப்பினர்கள் நடராஜன், ராஜேஸ்வரி கண்ணன் உள்பட மாவட்ட நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர்,கழக செயலாளர்கள்,சார்பு அணி அமைப்பாளர்கள்,நிர்வாகிகள்,பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றுகிறார்.

கூட்ட ஏற்பாட்டை நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் செய்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம் வேம்பார் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 137 மாணவ – மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி. மார்க்கண்டேயன் வழங்கினார். நிகழ்வில் தலைமையாசிரியர் மாரிப்பாண்டி, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, வேம்பார் தெற்கு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆரோக்கியராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஆசிரிய, ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கீழப்பழூவூர் சின்னச்சாமி
சனவரி 25 (1964)

இந்தித் திணிப்பை எதிர்த்து தனது 27வது வயதில் தமிழ்மொழி காக்க – திருச்சி மாவட்டம், கீழப்பழூவூர் என்கிற சிற்றூர் கழகத் தோழர் திருச்சி ரயில் நிலையத்தின் வாசலில் விடியற்காலை 4.30 மணிக்கு தன் தலையில் பெட்ரோலை ஊற்றிக் கொண்டு நெருப்பில் பற்றவைத்து, கொழுந்துவிட்டு எரியும் தீச்சுவாலைகளுக்கு இடையே 'தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!' என முழக்கமிட்டபடி தியாகத் தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட தீரன்.

"இந்தி எதிர்ப்புப் போரில் முதன்முதலாகத் தீக்குளித்தவர் என் கணவர்தான். அந்தப் பெருமை ஒன்றுதான் அவர் எனக்கு விட்டுப்போன சொத்து" என அவரது துணைவியார் தெரிவித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.